www.padippakam.com

# சாதி அமைப்பும் யாழ்ப்பாணத் தமிழர்களும்

## ஒரு சமூகவியல் பரிசீலனை

---

வ.ஐ.ச.ஜெயபாலன்

I

### சாதி அமைப்பு - சில அடிப்படை வரையறைகள்

சாதியமைப்பு இந்தியாவிலும் இந்திய சமூக கலாச்சார செல்வாக்கிற்குட்பட்ட தென்னாசிய நாடுகளிலும் மட்டுமே காணப்படுகிற பலமான சமூக நிறுவனமாகும். அரேபிய பிடோயின் (Bedouin) நாடோடிகள் மத்தியிலும், புராதன எகிப்து, ஜப்பான் போன்ற சில நாடுகளில் காணப்பட்ட சமூகங்களிடையேயும் சாதியமைப்பின் ஒரிரு கூறுகள் நிலவியமை ஆய்வாளர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது. இருப்பினும் அவை சாதி அமைப்பை ஒத்ததாக வளர்ச்சி அடையவில்லை. சாதியமைப்பின் தோற்றுவாயான இந்தியத் துணைக்கண்டத்தில் மூவாயிரத்திற்கும் அதிகமான சாதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவர்கள் மரபுசார்ந்து நான்கு வருணங்களாக குறிப்பிடப்பட்டபோதும் நடைமுறையில் பிராமணர்கள், சத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் (தலித்) என்று ஐந்து வருணங்களாக வகுக்கப்பட்டுள்ளனர்.

சாதி அமைப்பின் கீழ் ஒருவன் பிறக்கும் போதே அவனது சமூக, பொருளாதார, கலாச்சார உறவுகள் நிர்ணயமாகி விடுகின்றன. இங்கு அவனது தெரிவுக்கோ தனிப்பட்ட மேலோங்குவதற்கோ இடமில்லை. சாதி அமைப்பு பரம்பரையானது, மேல் கீழ் என படிமுறை உள்ளதும், தொழில் சார்ந்ததும், கண்டிப்பான சாதிவாரி அகமண விதியும் (சாதிவாரித் திருமணமுறை), கீழ் நிலையில் உள்ளவர்களும்; அவர்களுடனான உணவுப் பரிமாற்றமும் தீட்டுப்படுத்தும் என்ற கருத்தும், இவற்றுடன் தீண்டாமை, இந்துசமய அங்கீகாரம், சாதி அடிப்படையிலான சமூக சமயச் சடங்குகள், கலாச்சாரம் என்பவையினாலும் கட்டிக் காக்கப் படுவதாகும்.

சாதி அமைப்பில் படிமுறை அடிப்படையில் அமைந்த பல்வேறு சாதியினருக்கு இடையிலான அக உறவுகள் முக்கியமானவை. ஆராய்ந்து பார்ப்பின் அத்தகைய உறவுகள் நிலத்துடனும், கோவிலுடனும் பல்வேறு சாதியினரும் கொண்டிருக்கும் உற்பத்தி உறவுகளையும், கலாச்சார உறவுகளையும் பிரதிபலிப்பதைக் காணலாம்.

கலாசார ரீதியாக இந்தியனான தென்னாசிய மனிதனுக்கு தனிமனித ஆளுமைகளாலும் முயற்சிகளாலும் சாதித் தடைகளை மீறி மேலோங்குவது சாத்தியமில்லை.

சாதிவாரியான தென்னாசிய சமூகங்களில் செல்வம் மட்டுமே தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவருக்கு சமூக கலாச்சார மேன்மையையோ, ஆதிக்கத்தையோ ஈட்டித்தந்துவிடாது. செல்வந்தராகிவிட்ட மேற்படி நபர் தமது வர்க்கரீதியான அந்தஸ்தைப் போராடி நிலைநிறுத்துவதாகத் தீர்மானித்தால்கூட தனது வாக்க அணிகளையல்ல; தனது சாதி அணிகளையே சார்ந்திருக்க நேரிடும்.

வர்க்க ரீதியாக பெரும்பான்மையாக இருக்கும் உழைக்கும் வர்க்கத்தினர் சாதிவாரியாக பல்வேறு பட்டு சிறுபான்மையினராகக் குறுகிப் போவதும், வர்க்க ரீதியாகச் சிறுபான்மையினராக இருக்கும் மேல் வர்க்கத்தினர் சாதிவாரியாக பெரும்பான்மையினராக விரிவடைவதும் தென்னனாசிய சமூக அமைப்பின் சிக்கலான அம்சங்களாகும்.
இது இலங்கைக்கும் பொருந்தும்.

ஆசியர்களாக இருந்தபோதும் சீன அறிஞர்களுக்கு சாதி அமைப்பு புதிதான, புரிவதற்குச் சிக்கலான ஒரு நிறுவனமாகவே என்றும் இருந்து வந்திருக்கிறது. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த சீன யாத்திரீகன் குவாங் சாங்கிற்கும் (Hsvan Tsang) சாதி அமைப்பு புதிராகவே இருந்தது. 30-10-1979 ல் யாழ் பல்கலைக் கழக தென்னாசிய இயல் கருத்தரங்கில் உரையாற்றிய பீக்கிங் பல்கலைக் கழக விரிவுரையாளர் லியூ சிங் வூ (Liu Xing Wu) தான் பல்கலைக் கழகத்தில் தென்னாசியா பற்றிய ஆய்வுகளில் ஈடுபடும் வரை சாதி என்ற சொல்லை கேள்விப்பட்டதே இல்லை என்று குறிப்பிட்டார். சாதி பற்றிய சேதியை தென்னாசியாவிற்கு வெளியில் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு போத்துக்கீசரே எடுத்துச் சென்றனர். சாதியைக் குறிக்கும் ஐரோப்பிய மொழிச் சொற்களுக்கு 'காஸ்ராஸ்' (Castas) என்ற போத்துக்கீச மொழிச் சொல்லே அடியாகும்.

ஐரோப்பாவிலும், தென்னாசியாவிற்கு வெளியில் சீனா போன்ற ஆசிய நில உடைமை சமூக அமைப்புகளிலும் நிலவிய சமூக

www.padippakam.com



நிறுவனங்களை வர்க்க ரீதியாக ஆராய்ந்து புரிந்து கொள்ளமுடியும். தென்னாசிய நில உடைமை சமூக நிறுவனங்களை வர்க்க ரீதியாகவும் சாதிய ரீதியாகவும் ஆராய்ந்து புரிந்து கொள்ளுவது அவசியம்.

ஒரு சில சமூக அரசியல் விவாதங்களில் அடிக்கடி குறிப்பிடப்படுகின்ற 'ஆசிய மாதிரிகை' (Asian Model) ஒப்பீட்டு ரீதியான சமூகப் பொருளாதார ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. அது வெறும் அரசியல் தருக்க அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஆசிய மாயை ஆகும்.

II

## சாதி –
## ஒரு சமூக நிறுவனம்

இலங்கைத் தீவில் முஸ்லிம்களைத் தவிர்த்து பௌத்தர்களாகவோ, இந்துக்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ உள்ள சிங்களவர்களதும், தமிழர்களதும், மலையகத் தமிழர்களதும் மத்தியில் சாதி அமைப்பு வலுவான ஒரு சமூக நிறுவனமாக நிலவுகிறது.

முஸ்லிம்கள் மத்தியில் கூட வலுவிழந்து கைவிடப்பட்டு வருகிற நிலையில் சாதி அமைப்பின் மிச்ச சொச்சங்கள் இன்னும் நிலவுவதை அடையாளங் காணலாம். உதாரணத்துக்கு புத்தளம்-கற்பிட்டிப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் இன்றும் கூட முக்குவ முஸ்லிம்கள் என்று குறிப்பிடப் படுவதும், மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் மத்தியில் முக்குவரின் சமூக நிறுவனமான 'வயித்துவார்' எனப்படும் தாய்வழிக் குடி அமைப்பு (Matri liniage) காணப்படுவதும், யாழ்ப்பாணம் செம்மாதெருவில் வாழும் தோல் வேலை செய்யும் முஸ்லிம்களின் தாழ்ந்த சமூக அந்தஸ்தும் சில முஸ்லிம் பிரிவினரிடை வலுவிழந்த நிலையில் நிலவும் அகமண வழக்கங்களும் இங்கு குறிப்பிடப்படலாம்.

கோட்பாட்டு ரீதியில் இஸ்லாமிய மதத்தைப் போலவே பௌத்த, கிறிஸ்துவ சமயங்களும் சாதி அமைப்பை அங்கீகரிக்கவில்லை. எனினும் நடைமுறையில் முஸ்லிம்கள் மட்டுமே சாதி அமைப்பை நிராகரித்துள்ளனர். இலங்கையில் பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும் சாதி அமைப்புடன் சமரசம் செய்து கொண்டு ஒன்றிப் போகிற பண்பையே வளர்த்துள்ளனர்.

18ம் நூற்றாண்டின் கடைக் கூறுகளிலிருந்து 20ம் நூற்றாண்டின் முற்கூறுகள் வரையிலான சிங்கள பௌத்த சமய பீடங்களின் வரலாறு ஒருவகையில் 'கொவிகம' உயர் சாதியினரின் 'சியாம் நிக்காயாவை' சேர்ந்த பிக்குகளுக்கும் தாழ்த்தப் பட்ட 'கரவா', 'சலாகம', 'துறாவ', சாதிகளைச் சேர்ந்த பிக்குகளுக்கும் இடையிலான போராட்டங்களின் வரலாறேயாகும். பின்னர் 'கரவா', 'சலாகம', 'துறாவ', சாதியினர் எல்லாச் சாதியினருக்கும் பொதுவான 'அமரபுர நிக்காயாவை' நிறுவினர்.

கிறிஸ்தவ தேவாலயங்கள் எல்லாச் சாதியினரையும் ஒருங்கிணைக்கும் வகையில் அமையவில்லை. ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு தேவாலயம் என்ற வகையில், நிலவிய சாதி அமைப்பிற்குள் சிக்கல்கள் இல்லாமல் கிறிஸ்தவ சமயம் தன்னை இருத்திக் கொண்டது. மேல் மட்டத்தில் சமய அமைப்புக்களை கட்டுப்படுத்துவதற்காக வெள்ளாளர், கரையார் சாதிகளைச் சேர்ந்த குருத்துவ பிரிவினரிடையே இடம் பெற்ற இழுபறிகள் ஒன்றும் பரம இரகசியங்கள் இல்லை.

இந்துமதத்தை சாதி அமைப்பின் தத்துவ கலாச்சார காவல் அரண் என்றே கூறவேண்டும். இலங்கையில் கோவில் பூசகர்களான ஏழைப் பிராமணர்களே உள்ளனர். பிராமணிய இயக்கம் இலங்கையில் இல்லை. சாதி அமைப்பு இறுக்கமானதாகவும் கொடூரமானதாகவும் பலப்பட்டிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில், பெரும்பான்மையினராகவும், பெரும்பாலான நிலத்திற்கும் ஏனைய வளங்களுக்கும் உடைமையாளர்களாகவும், கல்வியில் மேம்பட்டும், சமூக பொருளாதார அரசியல் ஆதிக்கத்தைக் கொண்டிருக்கிறவர்களுமான வெள்ளாளரது இயக்கமான 'யாழ்ப்பாணியமே' உள்ளது. இது தமிழகத்து மேல்வர்க்கப் பிராமணர்களது இயக்கமான பிராமணீயத்துடன் ஒப்பிடக்கூடிய யாழ்ப்பாணத்து உயர்சாதி பிற்போக்கு சமூகசக்தியாகும். தமிழகத்தில் பிராமணர் தொகைரீதியாக மிகமிகச் சிறுபான்மையினர். சமூக பொருளாதார ரீதியாகவன்றி மாநில அரசியல்ரீதியாகப் பலம் பெறவிலாதவர்கள் ஆனால் யாழ்ப்பாணத்து மேற்தட்டு சூத்திரரான வெள்ளாளரது நிலமை மாறுபட்டது. அவர்கள் சமூக பொருளாதார ரீதியாக மட்டுமன்றி தொகைரீதியாக பெரும்பான்மை சமூகத்தவர்களாகவும் அரசியல் ஆதிக்கம் உள்ளவர்களாகவும் இருப்பது கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

ஒருவகையில் தமிழக அரசியல்கூட பிராமணரது அரசியல் ஆதிக்கத்தையும், அதனூடாக அவர்களது சமூக பொருளாதார, கலாசார ஆதிக்கத்தையும் உடைத்து தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கான மேல்தட்டு சூத்திரர்களின் கிளர்ச்சிதான். திராவிட இயக்கத்தின் முற்போக்கான அம்சம் அவர்கள் பஞ்சமர்களோடு (தலித்),